# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2045 தை-மார்கழி (2014 சனவரி-திசம்பர்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 11 | வெளியீடு: சூலை 2021



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 11
திருவள்ளுவர் ஆண்டு 2045 தை - மார்கழி (2014 சனவரி - திசம்பர்) | வெளியீடு: சூலை 2021

## பொருள் நிரல்

வாழ்த்துரை....1
முதன்மை ஆசிரியர் உரை....2
கூட்டங்கள்....3
தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா....7
பணியரங்குகள்....8
பயிலரங்குகள்....9
பிற நாடுகளில் காணும் தமிழ்க் கல்வெட்டுகள் – தி. நா. சுப்பிரமணியன்....17
கருத்தரங்குகள்....22
ஆய்வு உதவித்தொகைகள்....35

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக்கொண்டு 12 புலங்களினூடாகக் (1.இலக்கியப் புலம், 2.மொழியியல் புலம், 3.மொழிபெயர்ப்புப் புலம், 4.அகராதியியல் புலம், 5.மொழிகள் - மொழிக்கல்விப் புலம், 6.வரலாறு, சமூகவியல், மாந்தவியல் புலம், 7. தொல்லியல் புலம், 8.சுவடியியல் புலம், 9.கல்வெட்டியல், நாணயவியல் புலம், 10.கலை, கட்டடவியல் புலம், 11.அயலகத் தமிழ்ப் புலம், 12.மொழித் தொழில்நுட்பப் புலம்) கீழ்க்காணும் முதன்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
2. பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்தல்
3. இணையவழியில் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
4. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
5. வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
6. செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
8. இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
9. செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்

**ஆசிரியர் குழு**

முதன்மை ஆசிரியர்
**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர்கள்
**முனைவர் அ. ஆரோக்கியதாசு**
**முனைவர் த. சரவணன்**
**முனைவர் சி. இராமச்சந்திரன்**
**முனைவர் இரா. வெங்கடேசன்**

தரவு உள்ளீடு
**திரு. அ. முருகேசன்**

தொழில்நுட்பம்
**திரு. த. செந்தில்குமார்**

வடிவமைப்பு
**திரு. க. சங்கர்**



அட்டைப் படம்: **அனிச்ச மலர்**

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600 113.
தொலைபேசி: 044 – 22540125 | மின்னஞ்சல்: chemmozhi@cict.in | இணையம்: www.cict.in



**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
துணைத்தலைவர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தரமணி, சென்னை-113

# வாழ்த்துரை

நடுவண் அரசின் செம்மொழித் தகுதிப்பாட்டு அறிவிப்பிற்குப் பின்னர் உருவான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மொழிக்குக் கிடைத்த அரிய நிறுவனமாகும். இந்த அரிய நிறுவனத்தை முறையாக வளப்படுத்தித் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்காற்றச் செய்ய வேண்டும். அக் கடமை நமக்கு உண்டு.

தமிழின் சிறப்புகளையும், பழந்தமிழர்களின் அறிவுச் செல்வங்களையும் பிறநாட்டார் அறிந்துகொள்ளும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பழந்தமிழ் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுட்டு வருகின்றது.

இந்திய அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருவதைப் போலவே அவ்வட்டணையில் இடம்பெறாத மொழிகளிலும் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நரிக்குறவர் பேச்சுமொழியிலும் (வாக்ரிபோலி) திருக்குறளின் அரிய கருத்துகள் சென்று சேரவேண்டும் என்னும் நோக்கில் அம் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சிறப்புமிக்க அரிய பணிகளைச் செய்துவரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிகழ்வுகளை ஆவணப்படுத்திக் காட்டும் பதினொன்றாவது செய்தி மடல் தற்பொழுது வெளிவருகின்றது. இதற்குத் துணைநின்ற நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்; ஆய்வாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**(தெ. ஞானசுந்தரம்)**
துணைத்தலைவர்



**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**
இயக்குநர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தரமணி, சென்னை-113

# முதன்மை ஆசிரியர் உரை

உலக மொழிகளுள் தொன்மையும் தனித்தன்மையும் பெற்று விளங்கும் தமிழ் மொழிக்கு அமையப்பெற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை உலகத் தரம் வாய்ந்த ஆய்வு நிறுவனமாக நிலைபெறச் செய்யும் கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அதற்குரிய ஆக்கப் பணிகளையெல்லாம் நாம் அயராது செய்தல் வேண்டும்.

தமிழின் தொன்மையை வெளிப்படுத்தும் ஆய்வுகளுக்குச் செம்மொழி நிறுவனம் நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்தி வரும் அதேவேளையில், தமிழ் அறிஞர் பெருமக்களைப் போற்றிக் கொண்டாடியும் வருகிறது. இளந்தலைமுறை ஆய்வாளர்களுக்கு மூத்த தமிழாய்வாளர்களையும், அவர்களின் தமிழாய்வுப் பணிகளையும் நாம் அறியச் செய்தல் வேண்டும். இதன் ஒருபகுதியாகத்தான் 2014, ஏப்ரல் 21, 22ஆம் நாள்களில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்கத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சிறப்பாக நடத்தி முடித்தது. பல்வேறு அறிஞர் பெருமக்கள் இக்கருத்தரங்க அமர்வுகளில் பங்குபெற்றுத் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணி குறித்து ஆய்வுரைகள் வழங்கினார்கள்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செம்மொழித் தமிழாய்வுகளை ஊக்குவிக்கவும், பரவலாக்கம் பெறச் செய்யவும் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. செம்மொழித் தமிழில் ஆய்வு செய்யும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும், முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித் தொகைகள் வழங்கியும் ஊக்கப்படுத்துகிறது.

இவற்றை நன்முறையில் பயன்படுத்திச் செம்மொழித் தமிழின் சிறப்புகளைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஆய்வாளர்கள் ஈடுபட வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொண்டு இந்த மலர் ஆக்கப் பணிகளில் ஈடுபட்ட நிறுவனப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

**(இரா. சந்திரசேகரன்)**
இயக்குநர்

# கூட்டங்கள்

### 1. குறுந்திட்ட ஆய்வுகளுக்கான விண்ணப்பங்களைத் தேர்வுசெய்யும் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ், குறுந்திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்குப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து தகுதியான ஆய்வாளர்களைத் தேர்வுசெய்யும் முதல்நிலைக் கூட்டம், 03.09.2014 மற்றும் 05.09.2014 ஆகிய நாள்களில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் வி.பி. தேவதத்தா**
**முனைவர் அருணை பாலறாவாயன்**
**பேராசிரியர் அன்னிதாமசு**

ஆகியோர் தேர்வுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வரப்பெற்ற 179 விண்ணப்பங்களில் இரண்டாம் நிலைத் தேர்வுக்காக 45 விண்ணப்பங்கள் தேர்வுக் குழுவால் இறுதி செய்யப்பட்டன.

### 2. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்வோரின் ஆய்வுகளை மதிப்பீடு செய்வதற்கான கூட்டம், 02.01.2014 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் கு. சிவமணி**
**பேராசிரியர் அன்னிதாமசு**
**பேராசிரியர் த. வசந்தாள்**
**பேராசிரியர் எம். ஏ. பாகீரதி**



ஆகியோர் மதிப்பீட்டுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டு ஆய்வுத் திட்டங்களை மதிப்பீடு செய்தனர். இக்கூட்டத்தில் திட்ட ஆய்வாளர்கள் கலந்துகொண்டு, தாங்கள் மேற்கொண்டுவரும் ஆய்வுத்திட்டங்கள் குறித்த அறிக்கைகளை நிறுவனத்திற்கு ஒப்படைத்தனர். இக்கூட்டத்தில் மதிப்பிடப்பெற்ற திட்டப்பணி அறிக்கைகள் வருமாறு:

1. முனைவர் தி. சுப்பிரமணியன் - **தமிழரின் பண்பாட்டு வரலாற்றில் சங்ககால இலக்கியமும் பெருங்கற்காலச் சின்னங்களும்**
2. திரு. ஸ்ரீதர் - **தமிழ்நாட்டிலுள்ள 20,000 கல்வெட்டுகளை எண்ணிம நிழற்படம் எடுத்தல்**
3. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் - **உலக இலக்கணம்: தொல்காப்பியம்**
4. முனைவர் அ. பெனிட்டா - **செவ்வியல் தமிழ் இலக்கியமும் பழஞ்சீன இலக்கியமும் - ஒப்பாய்வு**
5. முனைவர் வ. தனலட்சுமி - **தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுக்கான சார்புப் பகுப்பி: குறுந்தொகை**
6. முனைவர் இரா. தாமோதரன் - **தமிழ்ச் செவ்வியல் படைப்புகள் கட்டமைக்கும் அறிவு மரபு**
7. முனைவர் அ. கலீல் ரஹ்மான் - **கபிலரின் ஆளுமையும் படைப்பாற்றலும்**
8. திரு. கும்பகோணம் ஏ. கஜேந்திரன் - **குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும்: இசைக் குறுந்தகடு, சுரதாள இசைக் குறிப்புகள்**
9. முனைவர் தே.வீ. சுமதி - **சங்க இலக்கியத்தில் அளபெடைச் சொற்கள்**
10. முனைவர் க. முருகேசன் - **திருக்குறள் உரைவேறுபாடுகள்**
11. திரு. எஸ். அகஸ்டின், திரு. சி. கபிலன் - **திருக்குறள் அறத்துப்பால் (18 ஆங்கில மொழிபெயர்ப்புகள்), முத்தொள்ளாயிரம் ஆகிய செவ்வியல் தமிழ் நூல்களுக்கான ஆண்டிராய்டு/ ஐபோன்/ஐபேடு கைப்பேசிச் செயலியை உருவாக்குதல், மேம்படுத்தல், பராமரித்தல்**
12. திரு. ஆர். வின்சென்ட் ராய் - **சங்க இலக்கியம் காட்டும் மருதத்திணை வாழ்வு**

### 3. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 20.03.2014 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில்,

**பேராசிரியர் த. வசந்தாள்**
**பேராசிரியர் கு. சிவமணி**
**பேராசிரியர் அன்னிதாமசு**

ஆகியோர் மதிப்பீட்டுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். திட்ட ஆராய்ச்சியாளர்கள் தாம் செய்துவரும் ஆய்வுப்பணிகளின் அறிக்கைகளை இக்கூட்டத்தில் ஒப்படைத்தனர். இக்கூட்டத்தில் மதிப்பிடப்பெற்ற ஆய்வுத் திட்ட அறிக்கைகள் வருமாறு:

1. முனைவர் சு. இராசாராம்
   **- செவ்வியல் தமிழ் இலக்கணக் கலைச்சொற் களஞ்சியம்**
2. முனைவர் இரா. சந்திரசேகரன்
   **- சங்க காலத் தமிழர் அரசியல் தத்துவமும் கிரேக்க ரோமானிய அரசியல் தத்துவமும்**
3. முனைவர் ந. வேலுசாமி
   **- பழந்தமிழகக் கோயில்களும் கலைகளும் (கி.பி.6ஆம் நூற்றாண்டிற்கு முன்)**
4. திரு.கே. வேங்கடாசலம்
   **- தமிழர் கணக்கியல் - சிந்துவெளி முதல்**
5. முனைவர் திருமதி. குளோறியா சுந்தரமதி
   **- சங்க இலக்கியத்தில் நெய்தல் திணைப் பாடல்கள் பகுப்பாய்வு அணுகுமுறை**
6. முனைவர் கா. இராசன்
   **- கொடுமணல் அகழாய்வு**
7. முனைவர் செ. சாரதாம்பாள்
   **- தொல்காப்பியமும் அரிஸ்டாட்டிலும் (தொல்காப்பியச் செவ்வியல்)**
8. முனைவர் பா. செல்வ சண்முகம்
   **- உடம்பினை உறுதி செய்யத் திருமூலர் காட்டும் வழிகள்**

### 4. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுத்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம், 15.07.2014 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் வி. காமகோடி**
**பேராசிரியர் அன்னிதாமசு**

ஆகியோர் கலந்து கொண்டு கீழ்வரும் ஆய்வறிக்கையை மதிப்பீடு செய்தனர்.

திரு.எஸ். அகஸ்டின், திரு.சி. கபிலன் - **திருக்குறள் அறத்துப்பால் (18 ஆங்கில மொழிபெயர்ப்புகள்), முத்தொள்ளாயிரம் ஆகிய செவ்வியல் தமிழ் நூல்களுக்கான ஆண்டிராய்டு/ஐபோன்/ஐபேடு கைப்பேசிச் செயலியை உருவாக்குதல், மேம்படுத்தல், பராமரித்தல்**

### 5. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குறுந்திட்ட ஆய்வுகளை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 04.09.2014 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்**
**பேராசிரியர் அன்னிதாமசு**
**பேராசிரியர் த. வசந்தாள்**

ஆகியோர் கலந்துகொண்டு பின்வரும் ஆய்வுத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்தனர்.

1. முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
   **- உலக இலக்கணம் : தொல்காப்பியம்**
2. முனைவர் இரா. மதிவாணன்
   **- பிற இந்திய மொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள்**
3. முனைவர் சி. திருமுருகன்
   **- நற்றிணை - பிரெஞ்சு மொழிபெயர்ப்பு**
4. முனைவர் எஸ். மார்கரெட் பாஸ்டின்
   **- சிலப்பதிகாரத்தில் இசையும் நாட்டியமும்**
5. முனைவர் செம்மல் சையத் மீர்சா
   **- திருக்குறளில் உள உடலியல் ஆழ்நோக்குப் பகுப்பாய்வு**
6. திரு. ப. அருளி
   **- பழந்தமிழர் உருவாக்கிய மண்கலங்களும் வளர்ச்சி வகைகளும் - உலக மொழிகள் சிலவற்றுள் அவற்றின் பெயர்ப் பதிவுகளும் - வேரியல் நோக்கு**
7. திரு. ஏ. விஜய பாஸ்கர்
   **- அரிக்கமேடு - ஓர் ஆவணம்**
8. முனைவர் ஏ. ஸ்ரீகண்டன்
   **- செவ்வியல் இலக்கியங்களில் கொற்றவையும் குமரி மாவட்டக் கொற்றவை வழிபாடும்**

### 6. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டுக்குழுக் கூட்டம் 08.12.2014, 09.12.2014 ஆகிய நாள்களில் நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் து. சீனிச்சாமி**
**முனைவர் த. வசந்தாள்**
**முனைவர் நடன. காசிநாதன்**
**முனைவர் இரா. மதிவாணன்**

ஆகியோர் கலந்து கொண்டு பின்வரும் ஆய்வுத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்தனர்.

1. திரு.கே.ஆர். சச்சிதானந்தம்
   **- திருக்குறளும் திருவிவிலியமும் ஓர் உயர்நிலை ஒப்பாய்வு**
2. முனைவர் எஸ். ராஜா
   **- சிலப்பதிகாரத்தில் சொல்லமைப்பு**
3. முனைவர் ஆ. மணவழகன்
   **- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பல்துறை அறிவும் துறைசார் மேலாண்மையும்**
4. முனைவர் எஸ். பத்மநாபன்
   **- தொல்தமிழ்ப் பண்பாட்டில் உலோகவியல்**
5. முனைவர் நா. நந்திவர்மன்
   **- பிரெஞ்சுக் காலனியக் காலத்திலும் விடுதலைக்குப் பிந்திய காலத்திலும் (21ஆம் நூற்றாண்டு வரை) அயல்நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் செவ்வியல் நூல்களின் மொழிபெயர்ப்புகள்**
6. முனைவர் க. சுசீலா
   **- சங்ககாலத் தமிழக ஊழிய மாந்தர்**
7. முனைவர் இரா. பாண்டுரங்கன்
   **- தமிழ்ச் செவ்விலக்கியத்திலும் தமிழ்க் கல்வெட்டிலும் நடுகற்கள் (6-ஆம் நூற்றாண்டு வரை) (மொழியும் சமூகமும் அரசியலும்)**
8. முனைவர் எஸ். அழகேசன்
   **- சங்க இலக்கிய உரையாசிரியர்கள் உணர்த்தும் இலக்கணக் குறிப்புகள் - தொகுப்பும் ஆய்வும்**
9. முனைவர் கு. அரசேந்திரன்
   **- தமிழுக்கும் வடவிந்திய மொழிகட்கும் இடையேயான வேர்ச்சொல் ஒப்புமைகள் - இலக்கண ஒப்புமைகள் பகுதி II**
10. திரு. பூரணச்சந்திர ஜீவா
    **- சங்க காலத் தமிழியும் சிந்து எழுத்தும்**
11. முனைவர் பா.ரா. சுப்ரமணியன்
    **-முன் வரலாற்றுக்காலம் (சங்க காலம் கி.மு.300 முதல் கி.பி.300 வரை) முதல் முன்னிடைக்காலம் (கி.பி.600-1300) வரையிலான கல்வெட்டுச் சொற்களின் தொடரடைவு**
12. முனைவர் வே. சீதாலெட்சுமி
    **- சங்க இலக்கியத்தில் புறத்திணை அமைவு**
13. முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை
    **- செம்மொழி இலக்கியத் தொன்மங்கள்: சமூகப் பண்பாட்டியல் ஆய்வு**
14. முனைவர் இரா. ஜானகி
    **- தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் கல்வியியல்**
15. முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி
    **- திருக்குறளும் தருமதீபிகையும் - ஓர் ஒப்பாய்வு**
16. முனைவர் தி. தாமரைச்செல்வி
    **- இலக்கிய இதழ்கள்வழித் திருக்குறள் ஆராய்ச்சி (1951 முதல் 2000 வரை)**
17. முனைவர் அ.கா. பெருமாள், திரு. செந்தீ நடராசன் **- சிலப்பதிகாரமும் கேரளக் கோவில்சார் கண்ணகி வழிபாடும்**
18. முனைவர் சொ. சாந்தலிங்கம்
    **- கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழகத்து நடுகற்கள்: மின்னணுவாக்க முறையில் ஆவணப்படுத்தல்**
19. முனைவர் மா. பத்மபிரியா
    **- சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புணர்வு**
20. முனைவர் உ. அனார்கலி
    **- சங்க இலக்கியங்களில் சுற்றுப்புறச் சூழலும் பெண்களும்**
21. முனைவர் எஸ். கற்பகம்
    **- சங்க இலக்கியங்கள் காட்டும் ஆடல் திறன்கள்**
22. முனைவர் தி. கமலி
    **- தமிழ் - சீன இலக்கியங்களில் போர்முறை**
23. முனைவர் ம.செ. இரபிசிங்
    **- பழந்தமிழகத்தில் நிகழ்த்துக் கலைகள் - நாடகத்தை முன்வைத்து**
24. முனைவர் பா. சத்யா
    **- செவ்வியல் நூல்களில் அளவைகள்**
25. முனைவர் பா. மதிவாணன்
    **- சங்க இலக்கியப் பண்டைய உரையாசிரியர்கள் தரும் இலக்கணக் குறிப்புகள்**

26. முனைவர் க. நெடுஞ்செழியன்
**- சங்க இலக்கிய அகத்திணை மரபுகளும் இந்தியக் காதல் இலக்கியங்களும்**

27. முனைவர் ந. வேலம்மாள்
**- தொல்காப்பியரின் பெண் கருத்தமைவும் சங்கப் பெண் கவிஞர்களின் ஏற்பும் விலக்கலும்**

28. முனைவர் ஆர். சிவசங்கரி
**- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தனிமனித ஆளுமைக் கூறுகளும் சமூக மேன்மையும்**

29. முனைவர் சு. தங்கமுத்து
**- சங்க காலச் சோழர் தலைநகரம் - ஆவூர் மாநகரம் மறைந்த மறக்கப்பட்ட மாநகரம் - வரலாற்றுப் பார்வை**

## 7. குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 22.12.2014 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் **பேராசிரியர் அன்னிதாமசு** அவர்கள் பங்கேற்றுப் பின்வரும் ஆய்வுத் திட்ட அறிக்கையை மதிப்பீடு செய்தார்.

திரு.எஸ். அகஸ்டின், திரு.சி. கபிலன் - **திருக்குறள் அறத்துப்பால் (18 ஆங்கில மொழிபெயர்ப்புகள்), முத்தொள்ளாயிரம் ஆகிய செவ்வியல் தமிழ் நூல்களுக்கான ஆண்டிராய்டு/ஐபோன்/ஐபேடு கைப்பேசிச் செயலியை உருவாக்குதல், மேம்படுத்தல், பராமரித்தல்**

## 8. கருத்தரங்க விண்ணப்பங்களைத் தேர்வு செய்யும் கூட்டம்

2014-15ஆம் கல்வியாண்டிற்கான கருத்தரங்குகளை நடத்துவதற்கு நிதிநல்கை வேண்டிப் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களைத் தேர்வுசெய்யும் கூட்டம் 19.09.2014 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இத்தேர்வுக்குழுக் கூட்டத்தில்,

**பேராசிரியர் மறைமலை இலக்குவனார்**
**பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் பா. மதிவாணன்**
**பேராசிரியர் பத்மாவதி விவேகானந்தன்**
**பேராசிரியர் இரா. வேதவல்லி**
**பேராசிரியர் ஆ. தானப்பன்**
**பேராசிரியர் சா. பாலுசாமி**

ஆகியோர் தேர்வுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டு கருத்தரங்கு நடத்த நிதியுதவி வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்களைத் தேர்வுசெய்து நிறுவனத்திற்கு வழங்கினர். இத்தேர்வுக் குழுக் கூட்டத்தை இலக்கியத் துறையினர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

## 9. காட்சிக் குறும்படத் திட்டம்

பழந்தமிழ் இலக்கியங்களையும் பழந்தமிழர் வரலாறுகளையும் தற்காலச் சமூகத்திற்கு நவீன ஊடகத்தின் வாயிலாகக் கொண்டுசெல்லும் நோக்கில் குறும்படங்களை உருவாக்கிக் குறுவட்டுகளாக வெளியிடும் திட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதன்மைத் திட்டங்களில் ஒன்று. அதன்படி 2014 - 15ஆம் ஆண்டிற்கான காட்சிக் குறும்படத் திட்டத்திற்கு விண்ணப்பங்களைத் தேர்வு செய்யும் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 22.09.2014 மற்றும் 31.12.2014 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**திரு. எஸ். பி. முத்துராமன்**
திரைப்பட இயக்குநர்

**பேராசிரியர் வீ. அரசு** (ஓய்வு)
இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

**திரு. கருணா பிரசாத்**, நாடகவியலாளர்

**திரு. பால்நிலவன்**, குறும்பட இயக்குநர்

**முனைவர் அ. சுமதி**, நடனக் கலைஞர்

ஆகியோர் தேர்வுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டு விண்ணப்பங்களைத் தேர்வு செய்தனர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தை இலக்கியத் துறையினர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வெளியீடுகள், அறிவிப்புகள் ஆகியவற்றை நிறுவனத்தின் இணையத்தளத்தில் காணலாம்.**

**www.cict.in**

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா

பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 2014 ஏப்ரல் 21, 22 ஆகிய நாள்களில் கருத்தரங்கினை நடத்தியது. இக் கருத்தரங்கிற்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவர் பேராசிரியர் ஔவை நடராசன் தலைமைதாங்கிச் சிறப்பித்தார். அவர் தலைமையுரையாற்றும்போது, தான் மாணவராய் இருந்தபோது தம் தந்தையாரைக் கண்டு பேச அடிகளார் அடிக்கடி வருவாரென்றும் அவ்வாறு அவர் வரும்போது தனக்கும் அடிகளாருடன் தொடர்பு ஏற்பட்டதென்றும் அடிகளாரின் தோற்றம் அனைவரையும் கவரும் வகையில் இருக்கும் என்றும் தமிழை உலகளாவிய அளவில் எடுத்துச் சென்றவர்களில் தனிநாயகம் அடிகளார் முதன்மையானவர் என்றும் அடிகளாரின் பன்மொழிப் புலமை, ஆளுமைத்திறன், கூர்மை ஆகியனவற்றில் அவருக்கு நிகர் அவரேதான் என்றும் பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் பற்றிய தம் நினைவலைகளைப் பகிர்ந்து கொண்டார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் நோக்கவுரை ஆற்றினார். அவ்வுரையில், அக்காலக்கட்டத்தில், ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் சமஸ்கிருதமொழி ஆய்வுகளிலிலேயே பெரிதும் ஈடுபட்டுவந்த சூழலில் தமிழியல் ஆய்வுகளில் ஐரோப்பிய அறிஞர்களை ஈடுபடச் செய்த சிறப்பு அடிகளாரையே சேரும் என்றும் சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் உலக அரங்கத்திற்கு எடுத்துச்சென்ற பெரும்பணியை அடிகளார் ஆற்றினார் என்றும் மிகச்சிறந்த திறனாய்வாளராகவும் ஒப்பிலக்கிய ஆய்வாளராகவும் தனிநாயகம் அடிகளார் விளங்கினார் என்றும் புகழாரம் சூட்டினார்.

விழாவின் தொடக்கவுரையில், தமிழகப் புலவர் குழுவின் துணைத்தலைவரும் தனிநாயகம் அடிகளார் பற்றிய ஆய்வாளருமான அமுதனடிகள் அவர்கள்,

அடிகளார் அவர்கள் கையொப்பமிடும் போது எப்பொழுதும் அவருக்கு மிகவும் பிடித்தமான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பாடலடியைத் தமிழில் எழுதி, அதற்குக் கீழே அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் எழுதி அதற்குக் கீழே எந்த மொழிக்காரருக்காக அதை எழுதுகிறாரோ அந்த மொழியில் எழுதி அதன்பின் கையொப்பமிடும் வழக்கத்தை-யுடையவர் என்று கூறினார். மேலும், அடிகளார் எங்குச் சொற்பொழிவாற்றினாலும் அச்சொற்பொழிவின் தொடக்கத்தில், 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்னும் திருமந்திரப் பாடலைச் சொல்லிய பின்பே அச்சொற்பொழிவைத் தொடங்குவார் என்றும் பேசினார்.



வாழ்த்துரை நல்கிய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அவர்கள், தமிழகம் தாண்டி உலகம் முழுமைக்கும் தமிழை எடுத்துச்சென்ற பெருமைக்குரியவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் என்று தம் கருத்தை விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் க.

நர்மதா நன்றியுரை நல்க இத்தொடக்கவிழா நிறைவுற்றது.

தொடக்கவிழா நிறைவடைந்தவுடன் இரண்டு நாள் கருத்தரங்க அமர்வுகள் தொடங்கின. இக்கருத்தரங்க அமர்வுகளில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் மறைமலை இலக்குவனார்**

**பேராசிரியர் த. வசந்தாள்**

**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**

**முனைவர் கு. ஜெயகுமாரி**

**பேராசிரியர் இராம. குருநாதன்**

**முனைவர் த. பூவை சுப்பிரமணியன்**

**பேராசிரியர் ப. மருதநாயகம்**

**பேராசிரியர் பா. வளனரசு**

**பேராசிரியர் கா. செல்லப்பன்**

**பேராசிரியர் கு. சிவமணி**

**பேராசிரியர் ஏ.எஸ். இளங்கோவன்**

**பேராசிரியர் செ. இரபிசிங்**

**பேராசிரியர் வீ. அரசு**

**முனைவர் இரா. வெங்கடேசன்**

**பேராசிரியர் ச.சு. இராமர் இளங்கோ**

**பேராசிரியர் க. திலகவதி**

**பேராசிரியர் உலகநாயகி பழனி**

அதன்பின் 22.04.2014 அன்று மாலை 4.00 மணிக்கு நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் தலைமையில் நிறைவு விழா நடைபெற்றது. இந்நிறைவு விழாவில் முனைவர் கி. ஜெயகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்க எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு. பொன்னவைக்கோ சிறப்புரை வழங்க முனைவர் வ. மாரியப்பன் நன்றியுரை நல்கப் பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா இனிதே நிறைவுற்றது.

# பணியரங்குகள்

## பணியரங்கு - 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழிகள் மற்றும் மொழிக் கல்வித் துறையில் 21.03.2014 முதல் 25.03.2014 வரை இணையவழிச் செம்மொழித் தமிழ்ப் பாடத்திட்டம் பற்றிய பணியரங்கு ஒன்று நடைபெற்றது. இப்பணியரங்கில் பேராசிரியர் அன்னிதாமசு ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். மொழிகள் மற்றும் மொழிக்கல்வித் துறையின் இணை ஆய்வறிஞர் முனைவர் ந. தேவியும் நிரலாளர் சு. கார்த்திகேயனும் இப்பணியரங்கில் கலந்துகொண்டனர். பேராசிரியர் சு. இராசாராம் அவர்கள் இப்பணியரங்கின் புறநிலை வல்லுநராகப் பங்கேற்று இணையவழிச் செம்மொழித் தமிழ்ப் பாடத்திட்டத்தின் தேவை, சிக்கல்கள், செயல்வழிப்படுத்தும் முறைகள் ஆகியவை பற்றி எடுத்துரைத்தார் இப் பணியரங்கின் இறுதிநாளான 25.03.2014 அன்று இணையவழிச் செம்மொழிப் பாடத்திட்டத் திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இத்திறனாய்வுக் கூட்டத்தில் புறநிலைத் திறனாய்வாளர்களாக,

**பேராசிரியர் சு. இராசாராம்**

**பேராசிரியர் ப. ரா. நக்கீரன்**

**பேராசிரியர் சு. பாலசுப்பிரமணியன்**

**பேராசிரியர் ச. சிவகாமி**

ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைத்தனர்.

## பணியரங்கு - 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழிகள் மற்றும் மொழிக்கல்வித் துறையில் 07.06.2014 முதல் 11.06.2014 வரை ஐந்துநாள் பணியரங்கு நடைபெற்றது. இப்பணியரங்கில்,

**பேராசிரியர் சு. இராசாராம்** (ஓய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் எம். நயினார்** (ஓய்வு, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்)

ஆகியோர் புறநிலை வல்லுநர்களாகப் பங்கேற்றுக் கருத்துரைத்தனர். முனைவர் ந. தேவி, முனைவர் ந. பெரியசாமி, திரு. சு. கார்த்திகேயன் ஆகியோர் இப்பயிலரங்கை ஒருங்கிணைத்தனர்

# பயிலரங்குகள்

### பயிலரங்கம் 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலமும் இணைந்து **'தொல்காப்பிய மொழியியல்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2014 முதல் 13.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் பெ. செல்வக்குமார் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வேலூரிலுள்ள ஊரீசுக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சிலம்பு சில பரிமாணங்கள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2014 முதல் 11.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ஏ.ஜெ. தியோடர் ராஜ்குமார் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 3

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சிவகங்கையிலுள்ள மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக்கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'செம்மொழி இலக்கியம் - கற்றல், கற்பித்தல், ஆராய்தல்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2014 முதல் 11.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ச. இராமமூர்த்தி இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.




### பயிலரங்கம் 4

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'முத்தொள்ளாயிரம் - இறையனார் களவியல் சிறப்புகள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 18.01.2014 முதல் 27.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மு. சாதிக்பாட்சா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 5

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவிலில் உள்ள தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரித் தமிழாய்வு மையமும் இணைந்து **'பழந்தமிழர் வாழ்வில் பக்தி இயக்கம்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 18.01.2014 முதல் 27.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் நீலகண்டப் பிள்ளை இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.




### பயிலரங்கம் 6

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கிருஷ்ணகிரி வித்யா மந்திர் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தொல்காப்பியத்தில் திணைக்கோட்பாடு'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 20.01.2014 முதல் 29.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ஆர். தெய்வம் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பத்மவாணி கலை அறிவியல் மகளிர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சங்க அக இலக்கியத்தில் திணைப் பாகுபாடுகள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 20.01.2014 முதல் 29.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ஏ. சசிகலா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 8

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இலக்கியம் மற்றும் சுவடிப்புலமும் இணைந்து **'ஓலைச் சுவடியியலும் தொல் எழுத்துக் கலையும்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 20.01.2014 முதல் 31.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் தி. மகாலட்சுமி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 9

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் ஒரத்தநாட்டிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரித் தமிழ்த் துறை 20.01.2014 முதல் 31.01.2014 வரை **'தொல்காப்பியத்தில் பல்துறைக் கோட்பாடுகள்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கு.ர.சரளா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 10

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டையிலுள்ள மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ் இலக்கியத்தில் முத்தொள்ளாயிரம் பெறும் இடமும் முத்தொள்ளாயிர மரபும்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 21.01.2014 முதல் 31.01.2014 வரை பத்து



நாள்கள் நடைபெற்றது. முனைவர் அ. செல்வராசு இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 11

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செம்மொழி இலக்கியங்களில் தமிழர் வழிபாட்டு மரபுகள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 21.01.2014 முதல் 30.01.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மு. பாண்டி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 12

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருப்பத்தூரிலுள்ள தூய நெஞ்சக் கல்லூரித் தமிழாய்வுத் துறை 21.01.2014 முதல் 30.01.2014 வரை **'சங்க இலக்கியத்தில் புலவர்களும் புரவலர்களும்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கி. பார்த்திபராஜா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 13

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சேலம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறை 22.01.2014 முதல் 01.02.2014 வரை **'தமிழ் இலக்கண வரலாற்றில் மரபுகளும் மாற்றங்களும்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் எம். ரமேசு இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 14

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மதுரைச் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்த் துறை 22.01.2014 முதல் 01.02.2014 வரை **'சங்கப்பெண் கவிஞர்களின் கருத்துப் புலப்பாட்டுநெறி'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் என். நந்தினி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 15

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் ஜெயங்கொண்டம் இலட்சுமி கல்வியியல் கல்லூரி 23.01.2014 முதல் 01.02.2014 வரை **'செவ்வியல் இலக்கியங்களைக் கற்பித்தல்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. திரு. பழனியாண்டி இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 16

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருவண்ணாமலை அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறை 24.01.2014 முதல் 02.02.2014 வரை **'உரையாசிரியர்களும் செம்மொழித் தமிழ் இலக்கிய, இலக்கணங்களும்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கை.சங்கர் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 17

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சென்னையிலுள்ள காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரித் தமிழ்த் துறை 27.01.2014 முதல் 06.02.2014 வரை **'சங்க இலக்கியத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கலைகளின் மரபு'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கரு.அழ. ஜோதிராணி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 18

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கோயம்புத்தூரிலுள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறை 27.01.2014 முதல் 05.02.2014 வரை **'தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒரு பன்முகப் பார்வை'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் க. அரங்கசாமி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 19

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருவையாற்றிலுள்ள அரசர் கல்லூரித் தமிழ்த் துறை 27.01.2014 முதல் 05.02.2014 வரை **'தொல்காப்பியம் - சொல்லதிகார உரையாசிரியர்கள்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் எஸ். இரவிச்சந்திரன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 20

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மன்னன்பந்தல் அ.வ.அ. கல்லூரித் தமிழ்த் துறை 29.01.2014 முதல் 07.02.2014 வரை **'சங்க இலக்கியங்களைக் கற்றல், கற்பித்தலில் பல்துறை அறிவின் பங்கு'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் சு. தமிழ்வேலு இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




### பயிலரங்கம் 21

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து **'தொல்காப்பியச் செய்யுளியலும் நடையியலும்'** என்னும் தலைப்பில் 01.02.2014 முதல் 10.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் வீ. ரேணுகாதேவி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 22

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'திருக்குறள் உரைவளம்'** என்னும் தலைப்பில் 03.02.2014 முதல் 12.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் சு. துரை இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 23

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டையிலுள்ள மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ்க் கல்வெட்டியல்'** என்னும் தலைப்பில் 03.02.2014 முதல் 12.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் ஏ. சந்திரபோஸ் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 24

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறையும் இணைந்து **'செவ்விலக்கியங்களில் பல்துறைச் சிந்தனைகள்'** என்னும் தலைப்பில் 03.02.2014 முதல் 12.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் க. திலகவதி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




### பயிலரங்கம் 25

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'கல்வெட்டியல் - தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி'** என்னும் தலைப்பில் 03.02.2014 முதல் 13.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் எஸ். அமிர்தவள்ளி இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 26

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சங்கப் பாடல்களில் நடத்தை உளவியல்'** என்னும் தலைப்பில் 04.02.2014 முதல் 13.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் கோ. சங்கரவீரபத்திரன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 27

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் இணைந்து **'காலந்தோறும் திருக்குறள் உரை வளர்ச்சி'** என்னும் தலைப்பில் 05.02.2014 முதல் 14.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் எஸ். தங்கமாரி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 28

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'புதிய நோக்கில் சங்க இலக்கியப் பனுவல் வாசிப்புப் பயிற்சி'** என்னும் தலைப்பில் 05.02.2014 முதல் 14.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் அரங்க. பாரி இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 29

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி மகளிர் கல்லூரி நாட்டியத் துறையும் இணைந்து **'சங்ககால ஆடல்களின் சமகாலத் தொடர்ச்சியாய்ச் செவ்வியல் மற்றும் நாட்டுப்புற ஆடல்கள்'** என்னும் தலைப்பில் 05.02.2014 முதல் 15.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. திருமதி பி. சீமா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.



### பயிலரங்கம் 30

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'கல்வெட்டுக்களின் வரலாறும் வாழ்வியலும்'** என்னும் தலைப்பில் 07.02.2014 முதல் 16.02.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் மா. கார்த்திகேயன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 31

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பூரிலுள்ள பார்க்ஸ் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'திணைமயக்கம் காட்டும் வாழ்வியல் நெறி'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 09.02.2014 முதல் 19.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மு. சோமசுந்தரம் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 32

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'தொல்காப்பியத் திணைக் கோட்பாட்டுப் பின்புலத்தில் சங்க இலக்கியம்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 10.02.2014 முதல் 19.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் நா. பிரியா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 33

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறையும் இணைந்து **'சங்க இலக்கியங்களில் மாந்த நேயம்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 11.02.2014 முதல் 20.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ஆர். அன்பழகன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 34

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செவ்வியல் நூல்களின் உரைகள் - பதிப்புகள் - பாடவேறுபாடுகள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 12.02.2014 முதல் 21.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர்




இரா. கண்ணன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 35

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் இணைந்து **'தமிழ்க் கல்வெட்டியல்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 14.02.2014 முதல் 23.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் கா. இராசன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 36

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'இரட்டைக் காப்பியங்களும் பண்டைத் தமிழர் தத்துவச் சிந்தனை மரபும்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 14.02.2014 முதல் 23.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் சூ. ஜா. இதயராஜா இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 37

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன நாட்டுப்புறவியல் துறையும் இணைந்து **'பண்பாட்டியல் நோக்கில் தமிழ்ச் செவ்வியல் காலப் பெண்கள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 17.02.2014 முதல் 26.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ச. பிலவேந்திரன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 38

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூரிலுள்ள பாரத் கலை அறிவியல் கல்லூரியும்

இணைந்து **'இன்றைய பார்வைகளில் சிலப்பதிகாரம்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 18.02.2014 முதல் 27.02.2014 வரை ஆறு நாள்கள் நடைபெற்றது. திரு. உடையார்கோயில் குணா இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 39

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னையிலுள்ள தமிழ் மருத்துவக் கழகமும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் காலமும் சித்த மருத்துவமும்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 19.02.2014 முதல் 28.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் எஸ். செந்தில் கருணாகரன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 40

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறையும் இணைந்து **'செவ்வியல் தமிழ்ச் சுவடிகள்'** என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 19.02.2014 முதல் 28.02.2014 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மோ.கோ. கோவைமணி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### பயிலரங்கம் 41

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கிருஷ்ணகிரி அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தொல்காப்பியம் - கற்பித்தல் வரலாறும் நெறிமுறைகளும்'** என்னும் தலைப்பில் 21.02.2014 முதல் 02.03.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் மா. வெங்கடேசன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




### பயிலரங்கம் 42

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூரிலுள்ள டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள்'** என்னும் தலைப்பில் 25.02.2014 முதல் 05.03.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் கி. மணிகண்டன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.



### பயிலரங்கம் 43

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்கால் அறிஞர் அண்ணா அரசுக் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'மொழியியல் மரபிலக்கணப் பார்வைகளில் தொல்காப்பியம்'** என்னும் தலைப்பில் 26.02.2014 முதல் 07.03.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் க. கண்ணன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 44

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தொல்காப்பியத்தில் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள் சார்பின்மை'** என்னும் தலைப்பில் 28.02.2014 முதல் 09.03.2014 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் மு. முருகேசன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

### பயிலரங்கம் 45

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பூம்புகாரிலுள்ள சிலப்பதிகார ஆய்வு மையமும் இணைந்து **'சிலப்பதிகார ஆய்வுகள், உரைகள்,**

**மொழிபெயர்ப்புகள்'** என்னும் தலைப்பில் *01.03.2014* முதல் *10.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. திரு. இரா. இராஜசேகரன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 46

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளித் தூய வளனார் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'மின் ஊடகங்களில் பழந்தமிழ் இலக்கியப் பனுவல்கள்'** என்னும் தலைப்பில் *03.03.2014* முதல் *12.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் தி. நெடுஞ்செழியன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## பயிலரங்கம் 47

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பனந்தாள் எஸ்.கே.எஸ்.எஸ். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செவ்வியல் தமிழ் நூல்களில் மெய்யியல்'** என்னும் தலைப்பில் *03.03.2014* முதல் *12.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் பங்கயச் செல்வி இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 48

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூரிலுள்ள அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து **'தொல்காப்பியம் - மொழியியல் பார்வையும் மரபுப் பார்வையும்'** என்னும் தலைப்பில் *05.03.2014* முதல் *14.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் கோ.வெ. நடராசன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 49

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியற்புலமும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் மெய்ப்பாடுகள்'** என்னும் தலைப்பில் *05.03.2014* முதல் *14.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் இளமதி சானகிராமன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## பயிலரங்கம் 50

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி உருமு தனலட்சுமி கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சங்க இலக்கியமும் பிற துறைகளும்'** என்னும் தலைப்பில் *11.03.2014* முதல் *20.03.2014* வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் ந. விஜயசுந்தரி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 51

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் பெரம்பலூரிலுள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி ஆங்கிலத் துறை *14.03.2014* முதல் *25.03.2014* வரை **'ஒப்பியல் நோக்குடன் இன்றைய மேலை இலக்கியக் கோட்பாடுகளின் வெளிச்சத்தில் எட்டுத்தொகையை விளக்குதல்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் வீ. அயோத்தி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 52

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கடலூரிலுள்ள பெரியார் கலைக்கல்லூரித் தமிழ்த்துறை *19.03.2014* முதல் *28.03.2014* வரை **'தொல்காப்பிய இலக்கியவியல் மரபுகளும்**

**நவீனத் திறனாய்வு முறைகளும்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கே. பழனிவேலு இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 53

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 22.03.2014 முதல் 31.03.2014 வரை **'தொல்காப்பியக் கவிதையியலும் சங்க இலக்கியங்களும்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் உ. அலிபாவா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## பயிலரங்கம் 54

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் நாமக்கல் கந்தசாமிக் கண்டர் கல்லூரித் தமிழ்த்துறை 26.03.2014 முதல் 04.01.2014 வரை **'சங்கம் மருவிய கால இலக்கியங்களுக்குச் சங்க யாப்பியலின் பங்களிப்பு'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கே.பொன்மொழி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## பயிலரங்கம் 55

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சேலம் ஏ.வி. எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை 29.12.2014 முதல் 07.01.2015 வரை **'தொல்காப்பிய நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள்'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் வே. சங்கரநாராயணன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கம் 56

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 31.12.2014 முதல் 09.01.2015 வரை **'சங்க இலக்கியச் சுவடிகளும் தொடக்ககாலப் பதிப்புகளும் (1887-1940)'** என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கோ. விசயராகவன் இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

---




நூல் : **Early Tamil Epigraphy**
ஆசிரியர் : **ஐராவதம் மகாதேவன்**
மொழி : ஆங்கிலம்
விலை : ₹ 4,000
வெளியீடு : செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

# பிற நாடுகளில் காணும் தமிழ்க் கல்வெட்டுகள்

**தி. நா. சுப்பிரமணியன்**

தமிழ் நாட்டுக்கு வெளியே காணும் தமிழ்க் கல்வெட்டுகளுக்குத் தனியான முக்கியத்துவமும், சிறப்பும் உண்டு. காஞ்சீபுரத்துப் பல்லவர்கள், தஞ்சாவூர்ச் சோழர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகியோர் அரசு புரிந்த நாளிலே தமிழ் மொழியே அரசவை நடவடிக்கைகளுக்கும் அரசியல் காரியங்களுக்கும் ஆளப்பட்டு வந்ததென்பதை நாம் அறிவோம். அந்த அரசுகள் மகோன்னத நிலையில் விளங்கிய காலங்களில் அவர்களுடைய ஆதிக்கம் தமிழ் நாட்டின் எல்லையைத் தாண்டி வடக்கே ஆந்திரப் பிரதேச, கர்நாடகப் பகுதிகளிலும், தெற்கே இலங்கைத் தீவிலும், இன்னும் கடல் கடந்து தென்கிழக்கு ஆசியப் பிரதேசங்களிலும் பரவி இருந்ததென்பதையும் நாம் அறிவோம். அதனால், தமிழ்நாட்டை ஒட்டி வெளியே உள்ள பிரதேசங்களில் தமிழ்க் கல்வெட்டுகளைக் காண்பது இயற்கையே. தமிழ் நாட்டை ஒட்டி, வடக்கே நெல்லூர், சித்தூர், கடப்பை, அனந்தப்பூர் போன்ற ஆந்திரப் பிரதேசத்து மாவட்டங்களிலும், மேற்கே கோலார், மங்களூர், மைசூர் போன்ற மைசூர் இராஜ்யத்து மாவட்டங்களிலும், கேரள நாட்டுப் பகுதிகளிலும் இன்னும் இலங்கைத் தீவிலும் பல தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன என்பதை அனைவரும் அறிவர்.

இந்தப் பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள இடங்களிலும் தமிழ்ச் சாசனங்கள் கிடைத்துள்ளன. ஆந்திரப் பிரதேசத்து விசாகப்பட்டினம் மாவட்டத்துத் தலைநகரான விசாகப்பட்டினத்திலேயே தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானதாக ஒன்றை எடுத்துக் காட்டலாம். அது, கி.பி.1250ஆம் ஆண்டில் கலிங்க நாட்டரசனான வீரநரசிங்க தேவனுடைய ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்டது. அப்போது தமிழ்நாட்டிலே அரசு புரிந்த தஞ்சாவூர்ச் சோழர்களின் வலி குன்றிவிட்டது. மதுரைப் பாண்டியர்கள் தலை கிளம்பி வந்தனர். ஆந்திரப் பிரதேசத்தில் தமிழர் கொண்டிருந்த ஆதிக்கம் மறைந்துவிட்டது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அந்நாளிலே விசாகப்பட்டினத்துக்குக் குலோத்துங்கச் சோழப்பட்டணம் என்று பெயர் வழங்கி வந்தது. அவ்வூரில் அமைந்துள்ள கரியமாணிக்க ஆழ்வார் என்னும் விஷ்ணுவின் கோயிலுக்கு வழங்கப்பெற்ற ஒரு தானத்தை அறிவிப்பதே அந்தக் கல்வெட்டு, அதை வழங்கியவன் இப்போது கேரள இராஜ்யத்தைச் சேர்ந்த பந்தலாயினி, கொல்லம் என்ற ஊரில் வசித்து வந்த ஒருவன் ஆவான். அந்தச் சாசனம் தமிழில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (சாசன இலாகாவின் ஆண்டறிக்கை, 1909ஆம் ஆண்டின் 98 எண் கொண்ட சாசனம்).

விசாகப்பட்டினத்துக்குப் பக்கத்திலேயே உள்ள சிம்மாசலத்திலிருந்தும் ஒரு தமிழ்க் கல்வெட்டுக் கிடைத்துள்ளது (தென் இந்தியச் சாசனங்கள், தொகுதி 6, எண். 1144). முதற் குலோத்துங்கச் சோழனுடைய ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த அந்தக் கல்வெட்டு, **'புகழ் சூழ்ந்த புணரி'** என்று தொடங்கும் அவனுடைய மெய்க்கீர்த்தியை முதலில் கொண்டே ஆரம்பிக்கிறது.

இலங்கையில் பொலநறுவையிலிருந்து கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்றையும் இங்கே குறிப்பிடலாம். ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரசு புரிந்து கி.பி. 1110 - 11ஆம் ஆண்டில் காலமான இலங்கை மன்னன் விஜயபாஹுவின் ஆட்சிக் காலத்துக்கிடையிலோ அல்லது அவன் இறந்துபோன சிறிது காலத்திற்குள்ளாகவோ பொறிக்கப்பட்டதாகும். புத்த பகவானுடைய புனிதச் சின்னமான பல்லை வைத்து அதன்மீது அம்மன்னன் எழுப்பிய பள்ளிக்கு "**மூன்று கைத் திருவேளைக்காரன் தலதாயப் பெரும் பள்ளி**" என்று பெயரிட்டு வேளைக்காரர் பாதுகாப்பிலே அதை விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. அந்தக் கல்வெட்டு (எ.பி. இந்திகா, பதினெட்டாம் தொகுதி, 338ஆம் பக்கம்) வேளைக்காரர் என்பார் தமிழ் நாட்டைச் சேர்ந்த போர்ப்படையினர் என்பதைக் கூறத் தேவையில்லை.

இவ்விதம் தமிழ் நாட்டிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் வேற்று மொழி பேசப்பெறும் இடங்களில் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுக்குப் பல சமயங்களில் அந்தப் பிரதேச மொழியின் பாடமும் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, ஒரே செய்தியைத் தமிழ், ஒரியா ஆகிய இரு மொழிகளிலும் கூறும் கல்வெட்டு ஒன்று ஒரிஸா மாநிலத்தின்

தலைநகரான புவனேச்வரத்தில் அரை நூற்றாண்டுக்கு முன் (1916இல்) பூமிக்கடியிலிருந்து கிடைத்தது. அது 1924ஆம் ஆண்டில் வங்காளத்து "**ஏஷ்யாடிக் ஸொஸைட்டி**"யின் பத்திரிகையில் புகைப்படத்தோடு வெளியிடப்பட்டது. அதிலே தமிழ்ப் பகுதி சரியாக வாசிக்கப்படவில்லை. எனவே, நான் அந்தத் தமிழ்ப் பகுதியை மட்டும் 15 ஆண்டுகளுக்கு முன் "**அமுத சுரபி**" தமிழ்ப் பத்திரிகையில் திருத்தமாக வெளியிட்டிருக்கிறேன். பின்னால் எபிகிராபியா இந்திகா 32ஆம் தொகுதி 224-33ஆம் பக்கங்களில் சாசன இலாகா அதிகாரிகளால் இரு பகுதிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ள கற்பலகை இப்போது கல்கத்தாவிலே கல்கத்தா பல்கலைக்கழகத்தின் ஆதரவில் நிறுவப்பட்டுள்ள இந்தியக் கலைப் பொருள்களுக்கான ஆசுடோஷ் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. கி.பி.14ஆம் நூற்றாண்டில் அரசு புரிந்த கலிங்க நாட்டுக் கஜபதி மன்னனான நான்காம் நரசிம்மனுடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1396இல்) வழங்கப்பட்ட ஒரு தானத்தைத் தெரிவிக்கிறது. அந்தக் கல்லின் தலைப்பிலே ஒரு புரையில் சாண் உயரமுள்ள கணபதியின் திருவுருவம் காணப்படுகிறது. முதலில் அதாவது கல்லின் இடது பக்கத்தில் தமிழ்ப் பகுதியும், அடுத்தாற்போல் வலதுபுறம் ஒரியா பாடமும் பொறிக்கப்பட்டுள்ளன.

# செம்மொழி நாள் விழா





நடுவண் அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்ததைக் கொண்டாடும் விதமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 30.10.2014 அன்று சென்னை இலயோலா கல்லூரியில் "**செம்மொழி இலக்கியங்கள்: வளமும் சிறப்பும்**" என்னும் பொருண்மையில் ஒரு நாள் கருத்தரங்கினை நடத்தியது.

இக்கருத்தரங்கில் பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன், பேராசிரியர் தெ. ஞானசுந்தரம், பேராசிரியர் பிரமிளா குருமூர்த்தி, முனைவர் ஈ. அங்கயற்கண்ணி, திரு. பிரளயன், முனைவர் கி. பார்த்திபராஜா ஆகியோர் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

# மணிப்புரி மொழியில் திருக்குறள் வெளியீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் திருக்குறள் - மணிப்புரி மொழிபெயர்ப்பு நூலை 15.03.2014 அன்று மணிப்பூர் மாநில ஆளுநர் திரு வீ.கே. துக்கள் அவர்கள் வெளியிட்டார். மணிப்பூரைச் சேர்ந்த திருமதி சோய்பம் ரெபிக்கா தேவி அவர்கள் திருக்குறளை மணிப்புரி மொழியில் மொழிபெயர்த்தார். இந்நூல் வெளியீட்டு விழாவில் ஆளுநரின் செயலாளர் ஆர்.கே. நிமாய் சிங், முதலமைச்சரின் செயலாளர் திரு. என். அசோக் குமார் (இ.ஆ.ப.), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் திருமதி வீ. கோ.பூமா, சுரச்சந்த்பூர் துணை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ்(இ.ஆ.ப.), உக்ருல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு செல்வன் நாகரத்தினம் (இ.கா.ப.), திருமதி சொய்பம் ரெபிக்கா தேவி, மோரே தமிழ்ச் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சித்தேச்வர மடத்தின் தலைவரான தபராஜமுனிவர் வாங்கியிருந்த கடனைத் தள்ளிக் கொடுக்கப்பட்டது பற்றிய விவரங்களை அது கொடுக்கிறது. அவருக்குத் தவச்சக்கரவர்த்திகள்என்றபெயரும்காணப்படுகிறது. ஒரியாப் பகுதியைக் காட்டிலும் தமிழ்ப் பகுதியிலே அதிக விவரங்கள் கிடைக்கின்றன.

ஆந்திரப் பிரதேசத்திலே குண்டூர் மாவட்டத்தின் கடற்கரையிலே உள்ள மோட்டுப்பள்ளி என்னும் ஊர் முன்னாளிலே ஒரு துறைமுகப்பட்டினமாக விளங்கியது. அங்கே உள்ள வீரபத்திரேச்வர ஸ்வாமி ஆலயத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இருக்கிறது. ரெட்டி வம்சத்து அரசனான அநவோடன் ஆட்சிக் காலத்தில், கி.பி. 1358ஆம் ஆண்டில் வழங்கப்பெற்ற அதன் இரு பகுதிகளும் ஒரே செய்தியைத் தெரிவிக்கின்றன. அந்தத் துறைமுகத்துக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கும் வணிகர்களுக்கும் கிடைக்கும் வசதிகள் முதலியவற்றை விவரித்துக் கூறுகிறது. எனினும் அதன் தமிழ்ப் பகுதியிலேதான் அதிகமான விவரங்கள் காணப்படுகின்றன (சாசன இலாகாவில் ஆண்டறிக்கை 1909ஆம் ஆண்டு 601, 603 எண்கள்). அந்தச் சாசனத்தின் தெலுங்குப் பகுதி தென் இந்தியச் சாசனங்கள், பத்தாம் தொகுதியில் எண் 556இல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதி இன்னும் வெளியிடப் பெறவில்லை.

இத்தகைய சாசனங்கள் தமிழ் நாட்டிலிருந்து எவ்வளவுக் கெவ்வளவு தூரத்தில் கிடைக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றின் மதிப்பும் அதிகம் ஆகும்.

கடல் கடந்த தீவாந்தரப் பிரதேசங்களான தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் தமிழ்க் கல்வெட்டுகள் சில கிடைத்துள்ளன. இப்போது தாய்லாந்து என வழங்கப்படும் சயாம் நாட்டில் (மலாயா பூசந்தியில்) தகுவா-பா (Takua-Pa) என்னும் இடத்திலிருந்து கி.பி.9, 10ஆம் நூற்றாண்டுகளில் வழங்கிய தமிழ் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட தமிழ்ச் சாசனம் ஒன்று, நங்கர் உடையான் என்ற ஒருவன் அங்கே அவனி நாரணம் என்ற பெயரில் ஒரு குளத்தை எடுத்து அதனை மணிக் கிராமத்தார் என்னும் வணிகக் குழு, சேனாமுகத்தார், பெயர் தெளிவாக இல்லாத மற்றொரு குழு ஆகிய மூன்று குழுவினரின் பாதுகாப்பில் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. (தென் கிழக்கு ஆசியாவில் காஞ்சிப் பல்லவர் (Kanchi in South East Asia) என்ற என்னுடைய ஆங்கில நூலில் பக்கங்கள் 115-120 பார்க்கவும்).

சுமத்திராத் தீவிலே பரோஸ் (Baros) பிரதேசத்தில் லோபுதுவா (Lobol Tolwa) என்னுமிடத்திலிருந்து உடைந்து சிதைந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று கிடைத்திருக்கிறது. அது ஜாவாவிலே கலை, விஞ்ஞானம் ஆகியவற்றுக்கான படேவியக் கழகத்தின் ஆதரவில் நிறுவப்பெற்றுள்ள புதை பொருள்களின் காட்சிச் சாலையிலே பாதுகாக்கப் பட்டிருந்தது. சக வருஷம் 1010 (கி.பி.1088) ஆண்டில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்னும் வணிகக் குழுவினர் அளித்த ஒரு தானத்தை அது தெரிவிப்பதாகும் (சாசன இலாக்காவின் ஆண்டறிக்கை, 1892, பக்கம் 92; இன்னும் படேவியா ஆராய்ச்சிப் பத்திரிக்கை என்ற டச்சு மொழிப் பத்திரிகையில் 1922ஆம் ஆண்டில் **'சுமத்திராத் தீவில் வணிகர் குழு'** என்ற தலைப்பில் திரு.க.அ. நீலகண்ட சாஸ்திரி எழுதிய ஆங்கிலக் கட்டுரை, 314ஆம் பக்கம் முதல் பார்க்க).

பர்மாவிலே பாகாங் என்னுமிடத்திலிருந்து மற்றொரு தமிழ்க் கல்வெட்டுக் கிட்டி இருக்கிறது. கி.பி.13-14ஆம் நூற்றாண்டுகளில் வழங்கிய தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்ட அந்தச் சாசனம் புக்கம் ஆகிய அரிமர்த்தனபுரம் என்னும் அந்த ஊரில் நானாதேசி விண்ணகர் ஆழ்வார் என்று வழங்கப்பெற்ற விஷ்ணுவின் ஆலயத்தில் மலைமண்டலத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவன் செய்த பணிகளை எடுத்துரைப்பதாகும். (எபிகிராபிகா இந்திகா தொகுதி ஏழு) சேரமன்னரும், விஷ்ணு பக்தருமான குலசேகர ஆழ்வார் பாடிய முகுந்தமாலை என்னும் சமஸ்கிருத நூலின் ஆறாம் சுலோகத்துடன் அந்தச் சாசனம் துவங்குவது கவனிக்கத்தக்கது.

சீனத்திலிருந்தும் ஒரு தமிழ்க் கல்வெட்டுக் கிடைத்திருக்கிறது. ஹாங்காங்கு நகருக்கு வடக்கே பார்மோஸாத் தீவுக்கு எதிராக, பூ-சியான் மாகாணத்தில் உள்ள துறைமுகப் பட்டினமான சுவான்-சூ என்னும் இடத்திலிருந்து 1956ஆம் ஆண்டில் பூமிக்கடியில் இரண்டு துண்டுகளாகக் கிடைத்த ஒரு கல்லில் அது பொறிக்கப்பட்டுள்ளது. ஆறு வரிகளே கொண்ட அதில் முதல் ஐந்து வரிகள் தமிழிலும் கடைசி வரி சீனத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. சகாப்தம் 1203 (கி.பி.1281) சித்திரா பவுர்ணமி நாளில் தவச் சக்கரவர்த்திகள் சம்பந்தப்பெருமான்என்னும்பெரியார்செகசைகான் திருமேனிக்கு நன்றாக, அவனுடைய 'பர்மான்' படி சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்த விவரத்தை அது அறிவிக்கிறது. எம்பெருமான் பெயரைத் திருக்கதளீச்சுரம் உடைய நாயனார் என்பது

அப்போது சீனச் சக்கரவர்த்தியாக இருந்த குப்லேகானுடைய மூத்த மகனான இளவரசனே செகசைகான் ஆவான். தமிழ் நாட்டுச் சிற்ப முறையில் சைவ, வைஷ்ணவப் புராணச் சம்பவங்களைச் சித்தரித்துக் காட்டும் சிற்பங்களும் அங்கே கிடைத்துள்ளன. தமிழ்நாட்டு வரலாற்றுக்கும் அந்தச் சாசனம் முக்கியமானது. அதற்கு முந்தைய ஆண்டில் தமிழ்நாட்டில் மறைந்துபோன சோழர் பேரரசுக்குப் புத்துயிர் ஊட்டி அதனை மீண்டும் நிலைநிறுத்துவதற்குச் செய்த முயற்சிகளையும் அதன் மூலம் நாம் அறிய முடிகிறது. **'சீனத்திலே தமிழர் எழுப்பிய சிவன் கோயில்'** தலைப்பில் தமிழிலும், **'மத்திய காலத்துச் சீனத்திலே தமிழர் குடியேற்றம்'** (A Tamil Colony in Mediaeval China) என்ற பெயரில் ஆங்கிலத்திலும் நான் எழுதியுள்ள சிறு நூலில் இதனை விரிவாக ஆராய்ந்திருக்கிறேன்.

ஜப்பானிய மொழிக்கு வழக்கு வழங்கிவரும் எழுத்து முறைகளுள் ஒன்றான **'கதகந'** என்பது தமிழ்மொழி நெடுங்கணக்கையும், தமிழ் எழுத்துகளுக்கு அந்நாளில் வழங்கிய வரிவடிவத்தையும் கொண்டே அமைந்ததென்பதும் இவ்விடம் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கிடைத்த மற்றொரு தமிழ்க் கல்வெட்டையும் இங்கே குறிப்பிடலாம். அத்தீவின் தென்கரையில் உள்ள காலி (Galle) என்னும் நகரிலிருந்து கிடைத்த மும்மொழிக் கல்வெட்டே அது. தமிழ், பாரசீகம், சீனம் ஆகிய மூன்று மொழிகளிலும் பொறிக்கப்பெற்றுள்ள அந்தச் சாசனம், சீனத்தில் அரசு புரிந்த மிங் வம்சத்து மன்னன் யுங் லோ தன்னுடைய ஆட்சியில் 7ஆம் ஆண்டு (கி.பி. 1409) தன்னுடைய தளபதியான செங்-ஹோ மூலமாக அளித்த தானங்களைத் தெரிவிப்பதாகும். ஸ்போலியா ஜெய்லானிகா (Spolia Zeylanica) தொகுதி 8, பக்கங்கள் 122-132; தமிழ்ப் பகுதியின் வாசகத்திற்கு எபிகிராபிகா ஜெய்லானிகா மூன்றாம் தொகுதி, 303ஆம் பக்கம் முதல் பார்க்க). அந்த மூன்று வாசகங்களிலும் முன்னுரைப் பகுதியும் காணிக்கைப் பொருள்களின் பட்டியலும் ஒன்றாகவே உள்ளன. அந்தக் காணிக்கை யாருக்குச் செதுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் இடத்திலேதான் மூன்று மொழி வாசகங்களிலும் வெவ்வேறு பெயர்கள் காணப்படுகின்றன. அதனால் சீனச் சக்கரவர்த்தி மூன்று வேறு தெய்வங்களுக்கு ஒரே சமயத்தில் அளித்த காணிக்கைகளையும் அது தெரிவிப்பதாகும் என்று பழைய ஆசிரியர்கள் கருதி வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மொழி வாசகத்திலும் ஒவ்வொரு விதமாகப் பெயர் குறிக்கப்பட்டிருந்தாலும், மூன்று பெயர்களும் ஒரே தெய்வத்தைக் குறிப்பனவாகக் கொள்ளலாம் (இதனை நான் "**அளகேச்வரன்**" என்னும் நூலிலே விளக்கிக் காட்டியிருக்கிறேன். இந்தச் சாசனத்தின் தமிழ்ப் பாகத்தையும் அதிலே திருத்தமாகக் கொடுத்திருக்கிறேன்). இன்னும் உலக அரங்கில் இன்றைக்கு ஆங்கிலத்துக்கு இருக்கும் செல்வாக்கையும் மதிப்பையும் போலவே, அந்நாளில் ஆசியா முழுவதிலும் தமிழ் சிறந்த நிலையிலே விளங்கியது என்பதும் இதனால் தெரியவருகிறது.

பிற நாடுகளிலே தமிழ்க் கல்வெட்டுகளைப் பொறிக்கும்போது சில சமயங்களில் அந்தப் பிரதேசத்து எழுத்துகளாலேயே பொறித்து விடுகிறார்கள். அனந்தப்பூர் மாவட்டத்தில் கொத்தசீவரம் என்னும் ஊரில் அரையன் இராஜராஜன் ஆயின விக்கிரம சோழச் சோழிய வரையனுடைய தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. (தென் இந்தியச் சாசனங்கள், தொகுதி பத்து, எண்.300). ஆனால் அவை தெலுங்கு எழுத்திலே வெட்டப்பட்டுள்ளன. அவன் முதலாம் இராஜேந்திர சோழனுடைய ஆட்சிக் காலத்திலே அந்த இடத்தில் சோழ சாம்ராஜ்யத்துக்காகப் பெரும்பணி ஆற்றியவன். கோயில் எழுப்புவது போன்ற திருப்பணிகளையும் செய்தவன். அந்தக் கல்வெட்டுகள் ஒன்று செய்யுள் வடிவிலும் அமைந்தது. தெலுங்கு எழுத்தில் இருந்தாலும் தமிழ் மொழியில் இருப்பதால், தெலுங்கு ஆராய்ச்சியாளர்கள் அதனை ஒதுக்கிடக்கூடும். அதே போல அது தெலுங்கு எழுத்தில் காணப்படுவதால் தமிழ் ஆராய்ச்சியாளர்களும் அதனை அறியமாட்டாமல் ஒதுக்கிடக்கூடும். இவ்விதம் இரு சாராராலும் அத்தகைய கல்வெட்டுகள் ஒதுக்கப்படுவது இயற்கையே. எனவே, இத்தகைய கல்வெட்டுகளைப் பற்றி அதிகக் கவனம் தேவை.

இவ்விதம் தமிழ்நாட்டுக்குள்ளேயே கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுகள் ஏராளமாக உள்ளன. அவற்றின் தொகை ஆயிரக்கணக்கில் ஓடும் என்று தெரிகிறது. அவை அனைத்தும் வெளியிடப்படுவதற்குக் காலம் பிறக்கலாம். எனவே, அதற்கிடையில் அத்தகைய சாசனங்களைத் தொகுத்து அவை கூறும் விவரங்களையும் சேகரித்து ஒரு பட்டியல் தயாரித்து வெளியிட வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

- இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு,
கலைக் காட்சிக்குழு வெளியீடு,
சென்னை, 1968. பக். 179 -182.

# ஐம்பெரு விழா

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் ஐம்பெரு விழாவானது சென்னை இலயோலா கல்லூரியில் 27.02.2014 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் திருமதி வீ.கோ. பூமா அவர்கள் தலைமை தாங்கி விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.

இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இலச்சினையை முனைவர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் வெளியிட்டார்.

பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் **‘இறையனார் களவியல்’** செம்பதிப்பினை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

திருக்குறள் செல்பேசிச் செயலியை எழுத்தாளர் அசோகமித்திரன் அவர்கள் வெளியிட்டார்.

திரைப்பட இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன் **“ஐந்திணைக் காட்சிகள்”** என்னும் அசைகலைப் படத்தை (Animation) வெளியிட்டார்.

**இறையனார் அகப்பொருள், முத்தொள்ளாயிரம்** ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு மின்னூலை எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி வெளியிட்டார்.

பேராசிரியர் சு. வேங்கடராமன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் **உ.வே.சா. செம்மொழித் தமிழ்த் தரவகத்தை** ஆய்வுலகப் பயன்பாட்டிற்கு இணையத் தளத்தில் வெளியிட்டார்.

பேராசிரியர் ம.வே. பசுபதி அவர்கள் **“உ.வே.சா. இன்றிருந்தால்”** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும், இவ்விழாவில் செம்மொழி இலக்கியக் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. விழாவின் இறுதியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நன்றி நவின்றார்.









# கருத்தரங்குகள்

## கருத்தரங்கம் 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை விவேகானந்தா கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'திருக்குறள் காட்டும் ஆளுமை வளர்ச்சி நெறிகள்'** என்னும் தலைப்பில் 02.01.2014 முதல் 04.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எம். முத்தையா இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செவ்வியல் இலக்கிய உரையாசிரியர்களும் உரைவளமும்'** என்னும் தலைப்பில் 03.01.2014 முதல் 05.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் க. முருகேசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 3

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'செவ்வியல் இலக்கியங்களில் வழிபாட்டுக் கூறுகள்'** என்னும் தலைப்பில் 06.01.2014 முதல் 08.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. குணசேகரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 4

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் நிர்மலா மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சூழலியல் விழிப்புணர்வு'** என்னும் தலைப்பில் 07.01.2014 முதல் 09.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஏ. அருள்சீலி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 5

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்குடி அழகப்பா அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'பல்துறைத் தோற்றுவிப்புக்குச் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு'** என்னும் தலைப்பில் 08.01.2014 முதல் 10.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ச.முருகேசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 6

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்'** என்னும் பொருண்மையில் 08.01.2014 முதல் 10.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் தெ. திருஞானமூர்த்தி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'மணிமேகலையில் சமயமும் மெய்யியலும்'** என்னும் பொருண்மையில் 08.01.2014 முதல் 10.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. சீனிவாசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 8

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேரள மாநிலக் கண்ணூர்ப் பல்கலைக்கழக மலையாளத் துறையும் இணைந்து **'மலையாள இலக்கணத்தில் தொல்காப்பியத்தின் தாக்கம்'** என்னும் பொருண்மையில் 16.01.2014 முதல் 18.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஏ. எம். ஸ்ரீதரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 9

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையும் இணைந்து **'மருதநில வாழ்க்கை: சங்க இலக்கியங்களிலிருந்து சமகால இலக்கியங்கள் வரை'** என்னும் பொருண்மையில் 20.01.2014 முதல் 22.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் டி. தருமராஜ் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 10

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சங்ககாலச் சமூகத்தின் பன்முக நிலை - பத்துப்பாட்டு வழி நோக்கு'** என்னும் பொருண்மையில் 22.01.2014 முதல் 24.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஜே.ஆர். லட்சுமி இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 11

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் தஞ்சாவூரிலுள்ள மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரித் தமிழ்த் துறை 22.01.2014 முதல் 24.01.2014 வரை **'மொழியியல் நோக்கில் தொல்காப்பிய உரைகள்'** என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் மா. கோவிந்தராசு இந்தக் கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார்.

### கருத்தரங்கம் 12

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக மண்டல மைய மேலாண்மைத்துறை 22.01.2014 முதல் 24.01.2014 வரை **'செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் தற்கால மேலாண்மைச் சிந்தனைகள்'** என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் ஜி. பரணி இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார்.

### கருத்தரங்கம் 13

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழக இதழியல் மற்றும் அறிவியல் தொடர்புத்துறை 22.01.2014 முதல் 24.01.2014 வரை **'சங்க இலக்கியத்தில் தொடர்பாடல்'** என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் ஜெ. பாலசுப்பிரமணியம் இந்தக் கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார்.

### கருத்தரங்கம் 14

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சென்னை இலயோலா கல்லூரித் தமிழ்த்துறை 22.01.2014 முதல் 24.01.2014 வரை **'தொல்காப்பிய மரபும் சங்க நூல்களும்'** என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் சூ. அந்தோணி செல்வநாதன் இந்தக் கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார்.

### கருத்தரங்கம் 15

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கன்னியாகுமரி இலக்குமிபுரம் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை 23.01.2014 முதல் 25.01.2014 வரை **'பதிற்றுப்பத்தில் தொல்காப்பியத்தின் தழுவலும் விலகலும்'** என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் எஸ். கணேசு இந்தக் கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார்.



### கருத்தரங்கம் 16

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'நவீன இலக்கியக் கோட்பாட்டு நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள்'** என்னும் தலைப்பில் 23.01.2014 முதல் 25.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர்




ப. கமலக்கண்ணன் அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 17

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் கேஜி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சங்க இலக்கியத்தில் கலைஞர்களும் கலைக்கூறுகளும்'** என்னும் தலைப்பில் 23.01.2014 முதல் 25.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் கோ. ஜெகதீஸ்வரி அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 18

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சி காவேரி மகளிர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'வரலாற்றியல் நோக்கில் தமிழ் இலக்கியவியல்'** என்னும் தலைப்பில் 23.01.2014 முதல் 25.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஏ. ஆர். கோமதி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.



## கருத்தரங்கம் 19

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வாரணாசி இந்துப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து **'தெற்காசிய மொழிகளும் இலக்கியங்களும்'** என்னும் தலைப்பில் 23.01.2014 முதல் 25.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ராஜ்நாத் பட் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 20

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'செம்மொழி இலக்கியங்களில் பெண்கள் நிலை'** என்னும் தலைப்பில் 27.01.2014 முதல் 29.01.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் நா. செண்பகலட்சுமி அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 21

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவள்ளூர் லோகநாதன் நாராயணசாமி கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் மரபில் நெய்தல் நில வாழ்வியல்'** என்னும் பொருண்மையில் 27.01.2014 முதல் 29.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சி. செல்வகுமார் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 22

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பெரம்பலூரிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'பதிற்றுப்பத்து - மானிடவியல் சிந்தனைகள்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் நா. ஜானகிராமன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 23

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'செவ்வியல் இலக்கியங்களில் அணிகலன்களும் புழங்கு பொருட்களும்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல்

31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் என். கந்தம்மாள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 24

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழாய்வுத்துறையும் இணைந்து **'மரபு மற்றும் மொழியியல் நோக்கில் தொல்காப்பியம்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. மோரிஸ் ஜாய் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.



## கருத்தரங்கம் 25

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'பண்டைய தமிழர் வாழ்வியல் நுண்கலைகள்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் யூ. ராஜு இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.




## கருத்தரங்கம் 26

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து **'செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் கற்பித்தல் நெறிமுறைகள்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. ஜெகதீசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 27

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வேலூர் அறிஞர் அண்ணாஅரசினர் மகளிர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'செவ்வியல் நூல்களில் வாழ்வியல் கோட்பாடுகள் - சிறப்பு நோக்கு: தொல்காப்பியம்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஜா. வளர்மதி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 28

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை பாத்திமா கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'சங்கத் தமிழில் முத்தமிழ்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் என். அனுராதா இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.


## கருத்தரங்கம் 29

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கடலூர்பெரியார்கலைக்கல்லூரித்தமிழ்த்துறையும் இணைந்து **'சங்க இலக்கிய நெய்தல்திணைப் பாடல்களும் நாட்டுப்புற மீனவர் பாடல்களும்'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சு. தமிழாழிக் கொற்கை வேந்தன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.


## கருத்தரங்கம் 30

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'கால்டுவெல் 200'** என்னும் பொருண்மையில் 29.01.2014 முதல் 31.01.2014


# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் திருக்குறள் மொழிபெயர்ப்புகள்





**திருக்குறள்:**
**18 ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்பு - 3 பாகங்கள்**
**அ.அ. மணவாளன் (தொகுப்பாசிரியர்)**
**விலை: ரூ.2200/-**





**திருக்குறள் - மணிப்புரி**
**சோய்பம் ரெபிக்கா தேவி**
**விலை: ரூ.300/-**





**திருக்குறள் - தெலுங்கு**
**எஸ். ஜெயப்பிரகாஷ்**
**விலை: ரூ. 500/-**




**திருக்குறள் - குஜராத்தி**
**பி.சி. கோகிலா**
**விலை: ரூ.400/-**




**திருக்குறள் - கன்னடம்**
**எஸ். சீனிவாசன்**
**விலை: ரூ. 400/-**




**திருக்குறள் - பஞ்சாபி**
**தார்லோச்சன் சிங் பேடி**
**விலை: ரூ.300/-**

முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் கு. அரசேந்திரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 31

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருதுநகர் வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செவ்வியல் இலக்கியங்களில் புலப்பாட்டு நெறி'** என்னும் தலைப்பில் 30.01.2014 முதல் 01.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இ. செல்வி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 32

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சென்னையிலுள்ள இந்தி பிரச்சார சபா **'சங்க இலக்கியத்தின் உயர் பண்பாட்டு மரபு'** என்னும் தலைப்பில் 01.02.2014 முதல் 03.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் பி.கே. பாலசுப்பிரமணியன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 33

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் தத்துவத் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் கூறும் அறம்'** என்னும் தலைப்பில் 03.02.2014 முதல் 05.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஈ. ரவிக்குமார் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 34

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பொருளியல் துறையும் இணைந்து **'செம்மொழி இலக்கியத்தில் பொருளாதாரச் சிந்தனைகள்'** என்னும் தலைப்பில் 05.02.2014 முதல் 07.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சி. தண்டபாணி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 35

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் நெய்வேலித் தமிழ்ச் சங்கம் **'சங்க இலக்கியத்தில் நாட்டுப்புறக் கலைகளின் தாக்கம்'** என்னும் தலைப்பில் 07.02.2014 முதல் 09.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. திரு. சி. துரைக்கண்ணு இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 36

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் சாரதா மகளிர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'பெண்களுக்கான நீதி எடுத்துரைத்தலில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்'** என்னும் தலைப்பில் 10.02.2014 முதல் 12.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஏ. அம்பிகா இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 37

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்ப்புலமும் இணைந்து **'பண்பாட்டியல் - சமூகவியல் - மொழியியல் நோக்கில் கலித்தொகை'** என்னும் தலைப்பில் 12.02.2014 முதல் 14.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சி. சிதம்பரம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 38

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழகச் சமூகவியல் துறையும் இணைந்து **'பழந்தமிழ் மற்றும் நவீனத் தமிழ் இலக்கிய நோக்கில் குழந்தைகளின் பொருத்தப்பாடும் முக்கியத்துவமும்'** என்னும் தலைப்பில் 13.02.2014 முதல் 15.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சி. வெங்கடாச்சலம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 39

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அயல்நாட்டுத் தமிழர் புலமும் இணைந்து **'தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி: தொல்காப்பியத்தை முன் வைத்து'** என்னும் தலைப்பில் 19.02.2014 முதல் 21.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் கு. சிதம்பரம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 40

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையில் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி **'இரட்டைக் காப்பியங்களில் வாழ்வியல் கூறுகள்'** என்னும் தலைப்பில் 19.02.2014 முதல் 21.02.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் சே. கணேசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 41

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பெரம்பலூரிலுள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் நாட்டார் வழக்காற்றியலின் தாக்கம்'** என்னும் பொருண்மையில் 19.02.2014 முதல் 21.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. பழனிச்சாமி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 42

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் தஞ்சாவூரிலுள்ள தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கல்லூரித் தமிழ் உயராய்வு மையம் **'சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களின் ஆளுமைத் திறன்'** என்னும் பொருண்மையில் 19.02.2014 முதல் 21.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் ஆ. இளங்கோவன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 43

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் கன்னியாகுமரி விவேகானந்தா கல்லூரித் தமிழாய்வு மையம் **'தொல்காப்பிய இலக்கணப் பொருண்மையும் சங்க இலக்கியமும்'** என்னும் பொருண்மையில் 20.02.2014 முதல் 22.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் எஸ். சோமசுந்தரம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 44

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பாலக்காட்டிலுள்ள விக்டோரியா அரசுக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காப்பிய மரபுகள்'** என்னும்




பொருண்மையில் 24.02.2014 முதல் 26.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எம். சமுத்திரப் பாண்டியன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 45

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'செம்மொழித் தமிழ்க் கூறுகள் - தொன்மைக் காலம் முதல் அண்மைக் காலம் வரை'** என்னும் பொருண்மையில் 24.02.2014 முதல் 26.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சு. மாதவன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 46

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தொல்காப்பியமும் சமகாலத் தேவையும்'** என்னும் பொருண்மையில் 26.02.2014 முதல் 28.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் பொ.மா.பழனிச்சாமி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 47

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோயிலிலுள்ள புனித சிலுவைக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'செவ்வியல் இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள் - ஒன்றுபடும் புள்ளிகளும் விலகும் புள்ளிகளும்'** என்னும் பொருண்மையில் 26.02.2014 முதல் 28.02.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் வீ. ஜெயசீலி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 48

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தொல்காப்பியப் பொருளதிகாரம் - மரபுகளும் கோட்பாடுகளும்'** என்னும் பொருண்மையில் 27.02.2014 முதல் 01.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் மா. கிருபாகரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 49

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து **'மலையாள மொழியிலும் இலக்கியத்திலும் சங்க மரபுகளின் தக்கவைப்பு'** என்னும் பொருண்மையில் 03.03.2014 முதல் 05.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ப. ஜெயகிருஷ்ணன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 50

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கிறித்துவத் தமிழியல் துறையும் இணைந்து **'செவ்வியல் தமிழிலக்கியங்களில் தத்துவமும் சமயமும்'** என்னும் பொருண்மையில் 04.03.2014 முதல் 06.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் குளோரியா. வி. தாஸ் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.




## கருத்தரங்கம் 51

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் சென்னையிலுள்ள தமிழிசைக் கல்லூரி **'செவ்வியல் இலக்கிய இலக்கணங்களில் இசை நுணுக்கங்கள்'** என்னும் தலைப்பில் 04.03.2014 முதல் 06.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் இலட்சுமி பொதுவாள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 52

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் செங்கல்பட்டு இரா.வே. அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'நீதி இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்'** என்னும் தலைப்பில் 06.03.2014 முதல் 08.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. திருமதி த. இரத்தினம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.



## கருத்தரங்கம் 53

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் சென்னையிலுள்ள பண்டை இந்தியாவின் தொல்லியல் மற்றும் அறிவியல் ஆய்வகம் **'சங்க இலக்கியத்திலும் தொல்லியல் சான்றுகளிலும் காணலாகும் இரும்புக் காலத்தின் புழங்குபொருட் பண்பாடு'** என்னும் தலைப்பில் 11.03.2014 முதல் 13.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. முனைவர் டி. சத்தியமூர்த்தி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 54

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் **'கேரளத்திலும் சிலப்பதிகாரத்திலும் கண்ணகி வழிபாடு'** என்னும் தலைப்பில் 12.03.2014 முதல் 14.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. திரு. எம். முத்துராமன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 55

செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமூகவியல், மாந்தவியல் துறையும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து **'வரலாற்றியல், சமூகவியல், மாந்தவியல் நோக்கில் தொல்தமிழர் சமூகம்'** என்னும் பொருண்மையில் 2014 மார்ச்சு 12, 13, 14 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ந. அரணமுறுவலும் பேரா. இரா. சீனிவாசனும் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

இக் கருத்தரங்கின் தொடக்க விழா 12.03.2014 அன்று காலை 9.30 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமூகவியல், மாந்தவியல் துறைத் தலைவர் முனைவர் ந. அரணமுறுவல் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். செம்மொழிக் கன்னட உயராய்வு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. பாலகுமார், பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவர் கோ. தாமோதரன், பெங்களூர்த் தமிழ்ச் சங்க மேனாள் தலைவர் முத்து. செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர் சங்கத் தமிழரின் உணவுப் பண்பாடு குறித்துப் பேசினார். இறுதியாகப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கச் செயலாளர் வி. ஸ்ரீதரன் நன்றி நவிலத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

இக்கருத்தரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**முனைவர் சி. மகேசுவரன்**

**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**







**முனைவர் அ. சங்கரி**

**முனைவர் த. பூவைசுப்பிரமணியன்**

**திரு. சிவபாலசுப்பிரமணி**

**திரு. பி. இராமநாதன்**

**பேராசிரியர் இரா. சீனிவாசன்**

**முனைவர் அர. பூங்குன்றன்**

**முனைவர் அ. இலட்சுமி தத்தை**

**பேராசிரியர் சு. இராசவேலு**

**முனைவர் ம. தமிழ்வாணன்**

**முனைவர் மா. சுசிலா**

**பேராசிரியர் தா. கிருட்டினமூர்த்தி**

**பேராசிரியர் ந. கிருட்டினமூர்த்தி**

**பேராசிரியர் க. சுப்பிரமணியன்**

**பேராசிரியர் ஆ. பத்மாவதி**

**முனைவர் மு. திருநாவுக்கரசு**

**முனைவர் ந. அரணமுறுவல்**

**முனைவர் த. சரவணன்**

இக்கருத்தரங்கின் நிறைவு விழா 14.03.2014 அன்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் - கன்னட மொழியாக்கக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் இரா. சீனிவாசன் வரவேற்புரையாற்றினார். உலகத்

தமிழ்க் கழக நெறியாளர் பேராசிரியர் கு. பூங்காவனம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் தி.கோ. தாமோதரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமூகவியல், மாந்தவியல் துறைத் தலைவர் முனைவர் ந. அரணமுறுவல் நன்றி நவின்றார்.

## கருத்தரங்கம் 56

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அகராதியியல் துறையும் நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியும் இணைந்து **'கன்னியாகுமரித் தமிழ் வழக்காறுகள்'** என்னும் பொருண்மையில் 2014 மார்ச்சு 13, 14, 15 ஆகிய நாள்களில் கருத்தரங்கினை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அகராதியியல் துறைத் தலைவர் முனைவர் ச. மனோகரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 13.03.2014 அன்று காலை பத்து மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் முனைவர் ச. மனோகரன் வரவேற்புரையாற்றினார். எழுத்தாளரும் சாகித்திய அகாதெமி விருதாளருமான திரு பொன்னீலன் அவர்கள் தலைமை தாங்கினார். தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரித் தலைவர் திரு பி. ஆறுமுகம் பிள்ளை தொடக்கவுரை ஆற்றினார். எழுத்தாளர் தோப்பில் முகம்மது மீரான், பேராசிரியர் அ.கா. பெருமாள், தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சு. இராசாராம் நோக்கவுரையாற்றினார். முனைவர் டி.வி. ஜெகதீசன் நன்றி நவிலத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரையை வழங்கினர்.

**பேராசிரியர் சு. இராசாராம்**
**பேராசிரியர் அ.கா. பெருமாள்**
**பேராசிரியர் ப. பத்மநாபப் பிள்ளை**
**பேராசிரியர் கு. பகவதி**
**முனைவர் ச. மனோகரன்**
**முனைவர் ஸ்டீபன் சாம்**
**முனைவர் கிருஷ்ணன்**
**திரு. பொன்னீலன்**
**திரு. தோப்பில் முகம்மது மீரான்**
**திரு நாஞ்சில் நாடன்**
**திருமிகு மலர்வதி**

இந்தக் கருத்தரங்கின் நிறைவு விழா 15.03.2014 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வந்திருந்தவர்களைத் தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எம். சாந்தாள் வரவேற்றார். எழுத்தாளர் நாஞ்சில் நாடன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரிச் செயலர் ஏ. பெருமாள் பிள்ளை, திரு. பொன்னீலன், பேராசிரியர் ஏ. ஆதித்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முனைவர் ச. மனோகரன் நன்றிகூறக் கருத்தரங்க நிறைவு விழா இனிதே நிறைவடைந்தது.

## கருத்தரங்கம் 57

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் - மரபியல் பார்வையும் மொழியியல் நோக்கும்'** என்னும் தலைப்பில் 14.03.2014 முதல் 16.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. சந்திரசேகரன் அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## கருத்தரங்கம் 58

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவாரூரிலுள்ள தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து **'சங்க இலக்கிய இலக்கண இலக்கிய அமைதிகளும் தொல்காப்பிய விதிகளும் - ஓர் ஒப்பீடு'** என்னும் தலைப்பில் 18.03.2014 முதல் 20.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர்

கி. நாச்சிமுத்து அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## கருத்தரங்கம் 59

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழக மேலாண்மையியல் துறையும் இணைந்து **'பழந்தமிழரின் மேலாண்மை உத்திகள்'** என்னும் தலைப்பில் 19.03.2014 முதல் 21.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் பி. திருமூர்த்தி அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 60

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியற் புலமும் இணைந்து **'உலகமயமாக்கக் காலத்தில் திருக்குறளின் பொருத்தப்பாடு'** என்னும் தலைப்பில் 20.03.2014 முதல் 22.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் பி. லாசரஸ் சாம்ராஜ் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 61

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னையிலிலுள்ள குருநானக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தற்கால வாழ்வியலுக்குச் சங்கத்தமிழின் கொடை'** என்னும் தலைப்பில் 20.03.2014 முதல் 22.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எம். மூர்த்தி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 62

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் இன்றைய இளைஞர் மேம்பாட்டுச் சிந்தனைகள்'** என்னும் தலைப்பில் 24.03.2014 முதல் 26.03.2014 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் அ. இலட்சுமி தத்தை இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.



## கருத்தரங்கம் 63

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நந்தனத்திலுள்ள அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'கோட்பாட்டு நோக்கில் கலித்தொகை'** என்னும் பொருண்மையில் 26.03.2014 முதல் 28.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் டி. புகழேந்தி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 64

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'பிற்காலப் பொருளிலக்கண நூல்களில் தொல்காப்பியப் பொருளதிகார மரபும் மரபு மீறலும்'** என்னும் பொருண்மையில் 08.01.2014 முதல் 10.01.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் கோ. முத்துராஜ் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## கருத்தரங்கம் 65

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பெரம்பலூரிலுள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'தமிழ் இலக்கண வளர்ச்சிக்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களின் பங்களிப்பு'** என்னும் பொருண்மையில் 26.03.2014 முதல் 28.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் பெ. முத்துராஜ் இந்தக்




கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 66

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியார் உயராய்வு மையமும் இணைந்து **'திருக்குறளில் கருத்துப் புலப்பாட்டு முறைகளும் அணி இலக்கணச் சிந்தனையும்'** என்னும் பொருண்மையில் 27.03.2014 முதல் 29.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இரா. தாமோதரன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.



### கருத்தரங்கம் 67

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவனந்தபுரத்திலுள்ள கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து **'தமிழிலும் மலையாளத்திலும் உள்ள இலக்கணக் கோட்பாடுகள்: மரபு முதல் நவீனம் வரை'** என்னும் பொருண்மையில் 27.03.2014 முதல் 29.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஏ. சான்வாஸ் அவர்கள் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.



### கருத்தரங்கம் 68

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவையாற்றிலுள்ள அரசர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து **'செவ்வியல் இலக்கியங்களில் தமிழரின் கலை, பண்பாட்டுப் பதிவுகள்'** என்னும் பொருண்மையில் 28.03.2014 முதல் 30.03.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ச. திருஞானசம்பந்தம் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 69

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஜார்கண்ட் மத்தியப் பல்கலைக்கழகப் பழங்குடியினர் வழக்காற்றியல், மொழி, இலக்கிய மையமும் இணைந்து **'இந்தியாவில் உள்ள பழங்குடி இனங்கள் மீது சங்க கால மொழி, பண்பாடு ஆகியவற்றின் தாக்கம்'** என்னும் பொருண்மையில் 31.03.2014 முதல் 02.04.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ரபீந்திரநாத் சர்மா இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 70

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஆந்திர மாநிலம் குப்பத்திலுள்ள திராவிடப் பல்கலைக்கழகத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும் தமிழர்களின் சமய ஒழுகலாறு (கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு)'** என்னும் பொருண்மையில் 15.04.2014 முதல் 17.04.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஆர். விவேகானந்த கோபால் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 71

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்'** என்னும் பொருண்மையில் 09.12.2014 முதல் 11.12.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் தி. சிவகாமி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

### கருத்தரங்கம் 72

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி மாநிலம் திருக்கனூரில் உள்ள உஷா லட்சுமணன் கல்வியியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து **'தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துப்பள்ளி மரபுகள்'** என்னும் பொருண்மையில் 29.12.2014 முதல் 31.12.2014 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எஸ். உஷா இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## குறளின் குரல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு விழா 13.11.2014 அன்று மாலை 5.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் திருமதி வீ.கோ.பூமா அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேதகு தமிழக ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்கள் கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்களையும் ஐராவதம் மகாதேவன் அவர்களின் Early Tamil Epigraphy என்னும் நூலையும் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து, திருக்குறள் பன்மொழி வாசிப்பு நிகழ்வு நடைபெற்றது. தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, பஞ்சாபி, மணிப்புரி, பிரெஞ்சு, அரபி, மராத்தி, சீனம், சௌராஷ்டிரம் ஆகிய மொழிகளில் திருக்குறள் வாசிக்கப்பட்டது. விழாவின் இறுதியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நன்றி நவின்றார்.






# ஆய்வு உதவித்தொகைகள்

செம்மொழித் தமிழ் நூல்கள் நாற்பத்தொன்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உதவித்தொகைகள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது. அதன்படி 2014 ஆண்டு பின்வரும் முனைவர் பட்ட மேலாய்வாளர்கள் ஐவரும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 29 பேரும் எழுத்துத் தேர்வும் நேர்காணலும் நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### முனைவர்பட்ட மேலாய்வு உதவித்தொகை பெற்றவர்கள்

1. முனைவர் ந. சிவா
2. முனைவர் கா. கலைமணி
3. முனைவர் கோ. பவானி
4. முனைவர் சு.அ. அன்னையப்பன்
5. முனைவர் த. சிவவிவேதா

### முனைவர் பட்ட ஆய்வுக்கான உதவித்தொகை பெற்றவர்கள்

1. செ. சந்திரன்
2. த. காந்தி கௌசல்யா
3. இரா. ஹேமலதா
4. இரா. ஜெயந்தி
5. ச. காளிதாசன்
6. ப. கனிமொழி
7. கி. கண்மணி
8. சி. மகேஸ்வரி
9. செ. மாலதி
10. வ. மணிகண்டன்
11. மூ. பிச்சைப்பிள்ளை
12. அ. பூங்கொடி
13. சா. பிரபா
14. நா. பிரபு
15. கி. பிரேமா ராணி
16. ந. பிரியங்கா
17. ஜெ. ராஜகுமார்
18. கு. ராஜீவ்காந்தி
19. பொ. ரவீந்திரன்
20. கோ. சவீதா
21. பா. சியாமளாதேவி
22. கோ. சுந்தராம்பாள்
23. கா. சுரேஷ்
24. அ. தேன்மொழி
25. வ. தியாகராசன்
26. ச. தோமை பிரின்சியா
27. ர. உமாராணி
28. சே. வினோத்
29. சா. யாகனா

---

## இலக்கிய விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ், சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் 10.01.2014 அன்று இலக்கிய விழா நடைபெற்றது. அவ்விழாவில் கவிதை, ஓவியம், நாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. கவிதைப் போட்டியில் 28 மாணாக்கர்களும் ஓவியப்போட்டியில் 25 மாணாக்கர்களும் நாடகப்போட்டியில் 12 மாணாக்கர்களும் கலந்துகொண்டனர். சிறப்பாகத் திறமையை வெளிப்படுத்திய மாணாக்கர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

# இசைக் குறுவட்டுக்கள்





**பத்துப்பாட்டு முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-**




**தொல்காப்பியம் முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-**


**பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும்**
**(தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)**
**விலை உரூ.50/-**



Ancient Tamil Poetry and Poetics: New Perspective
*ஆசிரியர்: பேரா. ப. மருதநாயகம்*
*விலை : உரூ.450/-*

Dynamics of Tamil Finite System
*ஆசிரியர்: பேரா. இரா. கோதண்டராமன்*
*விலை : உரூ.650/-*



# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி

முனைவர் ந. தேவி

முனைவர் க. நர்மதா

முனைவர் இரா. அருள்மணி

முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்

முனைவர் சு. ஏழுமலை

முனைவர் மு. செல்வதுரை

முனைவர் சே. கரும்பாயிரம்

முனைவர் த. சரவணன்

முனைவர் இரா. வெங்கடேசன்

முனைவர் ந. பெரியசாமி

முனைவர் வ. மாரியப்பன்

முனைவர் ம. தமிழ்வாணன்

முனைவர் அ. ஆரோக்கியதாசு

முனைவர் மா. சுசிலா

முனைவர் ப. கண்ணதாசன்

முனைவர் சுப. வேல்முருகன்

முனைவர் வே. அழகுமுத்து

முனைவர். ம. நாகராஜன்

முனைவர் சி. இராமச்சந்திரன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

திருமதி ம. தாமரைச்செல்வி

திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்

திரு. கி. கண்ணன்

திரு. கோ. சந்திரசேகர்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*

திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*

முனைவர் இரா. அகிலன் *(நிரலாளர்)*

திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*

திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*

திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி *(அலுவலகக் கண்காணிப்பாளர்)*

திரு. ஜா.வா. பாஸ்கரன் *(இளநிலைக் கணக்கு அலுவலர்)*

திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*

திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*

திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*

திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்

திருமதி சு. கீதா

திரு. தி.ஞா. அருள்ஒளி

திரு. மு. முனியசாமி

திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி

திருமதி. சி. அன்னபூரணி

தொல்காப்பியம்

எட்டுத்தொகை

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

பத்துப்பாட்டு

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்